Registered as a Newspaper

அழகிய கலைநயம் மிக்க புதுமையான
22 KT
தங்க நகைகளை
ஆடர் செய்து பெற்றுக்கொள்ள நாடுங்கள்
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
தொலைபேசி: 23628

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை: ரூ 1-25

பெண்மைக்குமெருகேற்றும்
இளமைக்கு எழிலூட்டும்
தரமான
தங்க நகைகளை
அளிப்பவர்கள்
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்நகர்.
தொலைபேசி: 23628

சுடர்: 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு தை மீ 29 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1407 ஜமா ஆகிர் பிறை 12 (11-02-1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY சுடர் 6

- குண்டு துளைக்காத உடை
- 35 கவச வாகனங்கள்
- 1,500 சிப்பாய்கள் இரவிரவாக பலாலியில் இருந்து வந்தனர்
- மும்முனைத் தாக்குதல்
- இராணுவம் புதுவித முயற்சி

# ஷெல் தாக்குதல் நடத்தி புலிகள் விரட்டிவிட்டனர்

## தொண்டமனாறில் நேற்று உக்கிரமான மோதல்கள்

— உதயன் வல்வைச் செய்தியாளர்: சி. சுந்தரலிங்கம் —

வல்வெட்டித்துறை, பெப். 11

குண்டு துளைக்காத சீருடையில் கவச வாகனம், புல்டோஸர் சகிதம் வெளியேறிய சுமார் ஆயிரம் சிப்பாய்கள், தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய பல மணி நேர உக்கிரத் தாக்குதலின் பின்னர் மீண்டும் முகாம் திரும்பினர்.

படையினரின் ஷெல் அடிக்கு நிகராக ஈடு கொடுக்கும் விதத்தில் புலிகளும் ஷெல் அடித்து அவர்களை முன்னேற விடாது திருப்பி அனுப்பினர்.

இந்த உக்கிர மோதலில் 7 சிப்பாய்கள் உயிரிழந்தனர் என்று சொல்லப்படுகிறது.

புலிகளில் ஒருவர் மோதலின் போது வீரமரணம் அடைந்தார். இருவர் சிறு காயங்களுக்கு ஆளாகினர்.

நேற்றுக் காலை முதல் மாலை வரை நடந்த இத் தாக்குதல் பற்றித் தெரிய வருவதாவது;

திங்கட்கிழமை இரவோடு இரவாக சுமார் 1500 சிப்பாய்கள் பலாலி முகாமில் இருந்து தொண்டமனாறு இராணுவ முகாமுக்கு வந்து சேர்ந்தனர்.

இவர்களுடன் 35 கவச வாகனங்களும் வந்து சேர்ந்தன.

தொண்டமனாறு கடற்கரையோரமாக சின்னக் கடற்கரையில் உள்ள (4ஆம் பக்கம் பார்க்க)

### பஸ்கள் திரும்பின

யாழ்ப்பாணம், பெப். 11

நேற்று யாழ் நகரில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு சென்ற பஸ்கள் அனைத்தும், இயக்கச்சியுடன் திரும்பிவந்தன—

பரந்தன் சந்தியில் விடுதலைப் புலிகளுக்கும் சிப்பாய்களுக்கும் இடையில் நடைபெற்ற மோதல் காரணமாகவே வாகனங்கள் போராளிகளினால் மறிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டன; வெளியூரில் இருந்தும் பஸ்கள் எதுவும் யாழ்ப்பாணம் வந்துசேரவில்லை. (இ-10)

# பரந்தன் பகுதி நேற்று போர்க்களமாகியது!

## வாகனப் போக்குவரத்து ஸ்தம்பிதம்

— கிளிநொச்சி மாவட்டச் செய்தியாளர் —

கிளிநொச்சி, பெப். 11

கிளிநொச்சி, பரந்தன் பகுதிகளில் இடம்பெற்ற பொம்மர், ஹெலி தாக்குதல்களைத் தொடர்ந்து நேற்று ஆனையிறவிலிருந்தும் கிளிநொச்சியிலிருந்தும் சிப்பாய்கள் பரந்தன் நோக்கி வந்தனர்.

இதனால் சகல காரணப் போக்குவரத்துக்களும் தடைப்பட்டன

யாழ்ப்பாணத்திலிருந்து வந்த வாகனங்கள் யாவும் ஆனையிறவில் பல மணி நேரம் தரித்து நின்ற பின்னர் மீண்டும் யாழ் நோக்கி திருப்பி அனுப்பப்பட்டன.

கிளிநொச்சி முகாமைச் சேர்ந்த சிப்பாய்கள் கரடிப் போக்குச் சந்தி வரை வந்து அங்கிருந்து ஷெல் தாக்குதல்களை பரந்தன் நோக்கி மேற்கொண்டனர்.

ஆனையிறவிலிருந்தும் கிளிநொச்சியிலிருந்தும் பரந்தன் நோக்கி வந்த சிப்பாய்களுடன் தமிழீழ விடுதலைப் புலிகள் நேரடி மோதலில் ஈடுபட்டனர்.

ஆனால் செய்தி எழுதும் வரை உயிர்ச்சேதம் பற்றிய விவரம் தெரியவில்லை.

இதே வேளை கிளிநொச்சி இராணுவ முகாமிலிருந்து பரந்தனுக்கு அண்மையாக உள்ள சில இடங்களில் ஹெலி (4ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் அரச அதிபர் ராஜினாமா; ராணுவ அதிகாரிகள் காரணமா?

யாழ்ப்பாணம், பெப். 11

வடமாகாணத்தின் விவசாய மாவட்டம் ஒன்றின் அரசாங்க அதிபர் திடீர் ராஜினாமாச் செய்துள்ளார் என்று நம்பிக்கையாகத் தெரிய வருகிறது

சம்பந்தப்பட்ட அரச அதிபர் தமது ராஜினாமாப் பத்திரத்தை, கொழும்பில் உள்ள உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அலுவலகத்தில் இம்மாதம் 5 ஆம் திகதி கையளித்தாராம்.

அதனைத் தொடர்ந்து இன்னொரு தமிழ் மாவட்டத்தின் மேலதிக அரசாங்க அதிபர் ஒருவரை அமைச்சு பதில் அரசாங்க அதிபராக விவசாய மாவட்டத்துக்கு (4ஆம் பக்கம் பார்க்க)



# ராஜீவ் அவசரச் செய்தி

## ஜே ஆரிடம் டிக்ஸிற் நேற்று கையளித்தார்

கொழும்பு, பெப். 11

இனப்பிரச்சினை சம்பந்தமாக பிரதமர் ராஜீவ் காந்தி அனுப்பிய அவசரச் செய்தி ஒன்றை கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் டிக்ஸிற் நேற்று ஜனாதிபதி ஜெயவர்த்தனவிடம் கையளித்தார்.

"பிரதமர் காந்தியின் கடிதம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும்

பரிசிலனையின் பின்னர் அதற்கான பதில் பிரதமர் காந்திக்கு அனுப்பி வைக்கப்படும்"

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தன தன்னிடம் தெரிவித்ததாக திரு டிக்ஸிற் தெரிவித்தார்.

பிரதமரின் செய்தி பற்றிய விவரங்களை வெளியிட திரு டிக்ஸிற் மறுத்து விட்டார் அமைச்சரவைக் கூட்டம் இன்று புதன் கிழமை நடைபெறுகிறது (இ-எ)

### இரண்டாவது டெஸ்ட் இன்று ஆரம்பம்

புதுடில்லி, பெப். 11

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட் இன்று புதன்கிழமை கல் (4ஆம் பக்கம் பார்க்க)

# பொதுமக்களில் அறுவர் ஷெல் தாக்குதலில் காயம்

## பலர் இடம்பெயர்வு, வீடுகள் சேதம்

வல்வெட்டித்துறை, பெப். 11

நேற்றுக் காலை முதல் மாலை வரை தொண்டமனாறு ராணுவ முகாமில் இருந்து நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் 6 பொதுமக்கள் காயமடைந்தனர்.

இரண்டுவீடுகள் பலத்த சேதமடைந்தன சுமார் ஆயிரம் பேர் இடம் பெயர்ந்தனர்.

கெருடாவில், தொண்டமனாறு, மயிலியதனை ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களே இடம் பெயர்ந்து நவிண்டில் அப்பா பள்ளிக்கூடம், உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி, இமையாணன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆகிய இடங்களில் தங்கியுள்ளனர்.

காயமடைந்தவர்கள் புலோலி, மந்திகை யாழ் ஆஸ்பத்திரிகளிலும் வல்வை இந்திராணி ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டனர்

காயமடைந்தவர்கள் பெயர்கள் வருமாறு;

1. ஆர் சற்குணராசா வயது38 திருவில், வல்வை
2. சின்னத்தம்பி விஜயசிகாமணி, வயது 21, பொலிகண்டி
3. செல்வி உமாராணி பாலசிங்கராசா, வயது17
4. செல்வி ரூபராணி பாலசிங்கராசா, வயது13 (இருவரும் சகோதரிகள்)
5 கருணை அப்பா கண்ணன் வயது 25 வேவிற் பிள்ளையார் கோவிலடி
6, செல்வி அப்பர்குஞ்சு வயது 16 வல்வை,

வேவிற்பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த ஏரம்பு சிவசுப்பிரமணியம், வல்வையைச்சேர்ந்த அப்பர் அண்ணு ஆகியோரின் வீடுகளே சேதமடைந்தன.

ஷெல் தாக்குதல்கள் காரணமாக மின் வயர்கள் அறுந்துவிழுந்தன. நெடிதுயர்ந்த பனைமரங் (4ஆம் பக்கம் பார்க்க)

### வல்லை வீதி போக்குவரத்து தடைப்பட்டது

உடுப்பிட்டி, பெப். 11

தொண்டமனாறுமோதலின்போது இடம்பெற்ற ஹெலிக்கொப்டர் தாக்குதல் காரணமாக வல்லை வீதியால் நடைபெற்ற தனியார் வாகனப்போக்குவரத்துக்கள் உடனடியாக நிறுத்தப்பட்டன.

மருதடித்துறையிலிருந்து புறப்பட்ட வாகனங்கள் மீண்டும் திரும்பி பருத்தித்துறைக்கேசென்றன. (எ-157)

### சிப்பாய்கள் 'பிஸ்னெஸ்'

ஆனையிறவு இராணுவ முகாமுக்கு அருகில் சிப்பாய்கள் சிறிய குளிர்பானக் கடை ஒன்றை நடத்துகின்றனர்.

முகாமின் முன் நடைபெறும் சோதனைகளால் பலமணி நேரம் பயணிகள் அங்கு தாமதம் அடைவதை சாதகமாகப் பயன்படுத்தி சிப்பாய்களின் இந்த 'பிஸ்னெஸ்' நடைபெறுகிறதாம்.

நியாயமான விலையிலேயே இவை இருப்பதால் பொது மக்களும் இவற்றை வாங்குவதைக் காணக்கூடியதாக இருக்கிறது (இ-10)

### அரச செலவில் இறுதிச்சடங்கு

யாழ்ப்பாணம், பெப். 11

அம்பாறை அரந்தலாவ பகுதியில் இனந்தெரியாதோரால் வெட்டிக்கொலைசெய்யப்பட்ட 28பேரின் இறுதிச்சடங்குகளுக்கான செலவுகளை அரச பொறுப்பேற்றது.

28 பேரின் சடலங்களும் ஒரே நேரத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு ஒரே நேரத்தில் தகனம் செய்யப்பட்டன (இ-10)

மெச்சத்தி மேளி



அவைக்கும் கொஞ்சம் மின்னல் மூளை இருக்குப் பிள்ளை...! தருணம் பார்த்து வியாபாரம் தொடங்கி இருக்கினம் பாக்கயில்லையே...!

### 'ஈழநாடு' வாழ்க!

'ஈழநாடு' பத்திரிகைக்கு இன்று இருபத்தெட்டாவது ஆண்டு பூர்த்தியாகிறது. இருபத்தொன்பதாவது வயதில் காலடி எடுத்து வைக்கும் 'ஈழநாடு'வுக்கு உதயன் - சஞ்சீவி - அர்ச்சுனா ஆகியன பத்திரிகைகள் நிறைந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பத்திரிகைகள் என்றால் வரும் போகும் என்ற நிலைமை இருந்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது ஈழநாடு. அக்காலத்தில் இலங்கையின் ஒரேயொரு மாகாணத் தமிழ்த் தினசரியாகவும் அது விளங்கியது

பல கஷ்ட, நஷ்டங்களை எதிர்நோக்கி, பல இடுக்கண்களைக் கடந்து, களைந்து அது தொடர்ந்தும் ஈழத் தமிழ் மக்களுக்குப் பணிபுரிவதற்குப் பின்னணியில் நிற்பவர் திரு. கே. சி. தங்கராசா ஆவார். அரசாங்கப்படைகள் ஆக்ரோஷம் கொண்டு ஈழநாடு அலுவலகத்தைப் பொசுக்கிய போதிலும் அதைக் கண்டு திரு. தங்கராசா மன உறுதி தளர்ந்தார் அல்லர்.

பத்திரிகை தொடர்ந்தும் சிறப்பாக வெளி வர அவர் சளையாது உழைத்தார். அதன் விளைவாக 'ஈழநாடு' இன்று யாழ்ப்பாண மக்கள் மனதில்பதிந்த பெயராகி விட்டது

'ஈழநாடு' வைவாழ்த்தும் அதே வேளையில் திரு. தங்கராசா மேலும் பல்லாண்டு வாழ்ந்து தமிழ் மக்களுக்குப் பெரும்பணி ஆற்றவும் வாழ்த்துகிறோம்

—நிர்வாகிகள்

# கும்புறுப்பிட்டியில் 12 பேர் சுட்டுக் கொலை

## பிள்ளையார் கோயில் சேதம்

யாழ்ப்பாணம், பெப். 11

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கும்புறுப்பிட்டி கிராமத்தைச் சுற்றிவளைத்த படையினர் 12 பேரைச்சுட்டுக் கொன்றனர். இவர்களில் எண்மர் ஆண்கள். நால்வர் பெண்கள்.

நூற்றுக்கு மேற்பட்டோர் கைதுசெய்யப் பட்டனர்.

ஞாயிற்றுக்கிழமை இச் சம்பவம் நடந்தது.

கும்புறுப்பிட்டி பிள்ளையார் கோவிலும் சிப்பாய்களினால் சேதப்படுத்தப் பட்டதாகத் தெரியவரு (4ஆம் பக்கம் பார்க்க)

### சரசாலையில் ஹெலியிலிருந்து ஷெல்

யாழ்ப்பாணம், பெப். 11

வயல்வெளியில் சூடு மிதித்துக்கொண்டு நின்றோரை நோக்கி ஹெலிக்கொப்டரில் இருந்து ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது

எனினும் எவரும் (4ஆம் பக்கம் பார்க்க)

# பஸ்பிடிக்க வந்தவர் பணத்தைப் பறிகொடுத்தார்

## யாழ்நகரில் சம்பவம்

யாழ்ப்பாணம், பெப். 11

கொழும்பு செல்வதற்கென பஸ் பிடிக்க யாழ் பஸ்நிலையம் நோக்கி வந்தவர் இடைவழியில் தமது பணத்தைப் பறிகொடுத்தார்.

சம்பவம்பற்றி அறியவருவதாவது:—

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் கடமைபுரியும் ஹரிஹரசர்மா என்பவர் கொழும்பு செல்வதற்காக பஸ்பிடிப்பதற்கு அதிகாலை 4 மணியளவில் தமது அரசடி வீதியிலுள்ள வீட்டிலிருந்து யாழ் பஸ்நிலையத்திற்கு நடந்து வந்துகொண்டிருந்தார்.

இந்து ஆரம்ப பாடசாலை அருகே அவர் வந்த போது சைக்கிள்கள் இரண்டில் வந்த இரு ஆயுதம் தாங்கிய இனம் தெரியாத நபர்கள் அவரை வழி மறித்தனர்.

தாம் இங்கே சென்றி நிற்பதாகக் கூறி அவரை அண்மையில் இருந்த கோவில் ஒன்றினுள் அவர்கள் அழைத்துச் சென்றனர்.

அங்கே அவரை சோதனைசெய்த அந்த இருவரும் அவரிடமிருந்த 160 ரூபா பணத்தை அபகரித்துக்கொண்டு தப்பிச்சென்றனர். (இ-5)

### இன்று நடக்கும் ஊர்வலம்

யாழ்ப்பாணம், பெப். 11

யாழ் குடாநாட்டின் பல பகுதிகளிலும் இன்று ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடைபெறவுள்ளன.

குடாநாட்டுக்கான எரிபொருள் தடையைக் கண்டித்தும், கடற்றொழில்தடையை எதிர்த்தும், தமிழ் மக்கள் மீதான படுகொலைகளைக் கண்டித்தும் இந்த ஊர்வலங்கள் நடைபெறுகின்றன.

மனிதஉரிமைகளுக்கான வெகுஜன இயக்கமும் (4ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

11 02 —1987
புதன்கிழமை
சுபநேரம்:
5.04 முதல் 6.34வரை
ராகுகாலம்:
12.34 முதல் 2.04வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
பிரதோஷ விரதம்

★ வெளிவந்து விட்டான்

அர்ச்சுனா

வெளிநாட்டுச் சஞ்சிகையோ என்று வியக்க வைக்கும் வண்ண முகப்பு அட்டையுடன் இப்போது விற்பனையாகிறது பெப்ரவரி மாத இதழ்.

★ சாதனை புரிந்த யாழ் சிறுர்கள்
★ வெள்ளைக் கிறிஸ்மஸ்
★ யப்பானின் மறுபெயர் சுவர்க்கமா ?
★ அறிவுலக அறிமுகம்
★ வியத்தகு விண்வெளி
★ கணிதப் புதிர்
★ என் சிலம்பம்

இன்னும் எத்தனையோ புதிய அம்சங்கள் !!!

★

இன்றே உங்கள் பிரதிக்கு முந்துங்கள்

தனிப்பிரதி ரூபா 3/- மட்டுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மீனவர் நிவாரண முத்திரைகள் 23 ஆம் திகதி முதல்

யாழ்ப்பாணம் பெப் 11 யாழ் மாவட்டத்தில் உள்ள மீனவர்களுக்கான நிவாரண முத்திரைகளை இம்மாதம் 23 ஆம் திகதி முதல் சம்பந்தப்பட்ட உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களில் மீனவர்கள் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

இதற்கான பூர்வாங்க வேலைகள் நடைபெறுவதாக உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. எஸ் பற்குணம் தெரிவித்தார்.

இம்முத்திரைகள் 15 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 90 ஆயிரம் பேருக்கு கிடைக்கவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (இ-5)

**★ சின்னஞ் சிறு விளம்பரங்கள் ★**

**சேவை**

தினசரி எங்களுடைய ஸ்தாபனம் இரவு 8 45 வரை திறந்திருக்குமென அறியத் தருகின்றோம். யாழ் சைனீஸ் றெஸ்ரோறன்ற், 124, RR நல்லையா வீதி முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். தொலைபேசி 23460.

**விற்பனைக்கு**

கோழிஇறைச்சி (புறொயிலர்ஸ்) முட்டை விற்பனைக்கு உண்டு சிமோட்டி பாம்ஸ், ஸ்ரேசன் ரோட், மயிலங்காடு சுன்னாகம். சிமாட்டி பாண்ஸி யாழ்ப்பாணம்.

## கிளிநொச்சி

### பால் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கம் மீண்டும் செயற்படுகிறது

விசுவமடு, பெப். 11 கடந்த வருடம் கிளிநொச்சியில் ஏற்பட்ட அசம்பாவிதங்களைத் தொடர்ந்து செயற்படாமல் இருந்துவந்த கிளிநொச்சி கூட்டுறவு பால் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் மீண்டும் செயற்படத் தொடங்கியுள்ளது.

இச் சங்கம் செயற்படாமல் இருந்ததனால் இப்பகுதியில் உள்ள பால் உற்பத்தியாளர்கள் பாதிக்கப்பட்டிருந்தனர்.

தற்போது முரசுமோட்டை 2ஆம்கட்டையில் இயங்கி வரும் இச் சங்கம் வெகு விரைவில் முன்னர் போன்று பால் கொள்வனவை ஆரம்பிக்க இருக்கின்றது.

பால் கொள்வனவை ஆரம்பிப்பது சம்பந்தமான கூட்டம் ஒன்று எதிர் வரும் 15ஆம் திகதி ஞாயிறு காலை முரசுமோட்டை முருகானந்தா மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

இப்பகுதியிலுள்ள பால் உற்பத்தியாளர்கள் பால் சேகரிப்பாளர்கள் அனைவரையும் தவறாது இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு மேற்படி சங்கப் பொதுமுகாமையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார் (இ-166)

### புதிய அதிபர்

பருத்தித்துறை, பெப் 11 மாதனை மெதடிஸ்த மிசன் பாடசாலையின் புதிய அதிபராக அல்வாய் வடக்கு றோமன் கத்தோலிக்க பாடசாலையைச் சேர்ந்த திரு வி. எஸ். மயில்வாகனம் நெல்லியடி தோட்டக் கல்விப்பணிமனையிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டார்.

இங்கு ஏற்கனவே கடமையாற்றிய அதிபர் திரு. ஏ. மயில்வாகனம் ஜனவரி மாதம் முதலாந்திகதியுடன் இளைப்பாறியுள்ளார். (இ-118)

### உள்ளூராட்சி ஒய்வூதியர் சங்கம்

யாழ்ப்பாணம், பெப்.11 உள்ளூராட்சி ஒய்வூதியம் பெறுவோர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் செயற் குழு உறுப்பினர்கள் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ச. இரத்தினம். செயலாளர்: திரு. க கதிரமலைநாதன் பொருளாளர்: திரு கா; முருகேசம்பிள்ளை (இ-5)

### போதை வஸ்து

வல்வெட்டித்துறை, பெப். 11 போதை வஸ்துப் பாவனையாளர்கள் இருவர் வடமராட்சியில் புலிகளினால் பிடிபட்டார்கள்.

இவர்களிடம் இருந்து 50 கிராமுக்கும் அதிகமான போதை வஸ்து பொருள்கள் கைப்பற்றப்பட்டன. (இ-160)

### பொருள்களை புலிகள் கைப்பற்றினர்

முழங்காவில், பெப் 11 பல்லவராயன் கட்டில் உள்ள ஜெயபுரம் கிராமத்தில் 1983 ஜூலைக் கலவரத்தினால் பாதிக்கப்பட்டு வந்து குடியேறிய மக்கள் மத்தியில் தொண்டர்கள் போல் நடித்து முட்கம்பிரோல்கள், சீமெந்து, வீடுகட்டுவதற்குரிய கல் போன்றவற்றை சிலர் மோசடி செய்தனராம்.

இவற்றைப் புலிகள் தற்போது கைப்பற்றி உள்ளனர்.

பல ஆயிரம் பெறுமதியுள்ள இப்பொருட்கள் அரசாங்கத்தினாலும், பொது ஸ்தாபனங்களினாலும் உதவியாக இவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

மோசடிக் குழுவின் தலைவரையும். உதவியாளரையும் புலிகள் விசாரணைக்கு அழைத்துச் சென்று, கடுமையாக எச்சரித்து விடுதலை செய்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது (இ-ரி)

### பாலர் கல்விக்கழக கருத்தரங்கு

யாழ்ப்பாணம், பெப் 11 யாழ் பாலர் கல்விக் கழகத்தின் ஆதரவில் பாலர் கல்வி பற்றிய கருத்தரங்கு பௌர்ணமி தினந்தோறும் நடத்தப்படவுள்ளது

இத் தொடரில் முதலாவது கருத்தரங்கு எதிர் வரும் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ் வைத்திஸ்வர வித்தியாலயத்தில் நடைபெறும்.

பாலர் கல்வி ஆசிரியருக்கும் அக்கறையுள்ளோருக்கும் இக்கருத்தரங்கு நடத்தப்படுகிறது. (இ-எ)

## விளையாட்டரங்கு

### கிறீன்பீல்ட் வெற்றி

யாழ்ப்பாணம், பெப்.11 ஷ்ரொ நிதிநிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ் வை எம் சி. ஏ நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் ஒரு கட்டத்தில் கிறீன்பீல்ட் விளையாட்டுக் கழக அணி யாழ் வை எம் சி ஏ. அணியைத் தோற்கடித்தது.

கிறீன்பீல்ட் அணி 65 புள்ளிகளைப் பெற்றது வை.எம்.சி ஏ. அணி 33 புள்ளிகளைப் பெற்றது

கிறீன்பீல்ட் அணிக்கு அருளதாசன் கூடுதல் புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்தார். வை எம் சி ஏ. அணிக்கு வாஷிங்டன் கூடுதல் புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்தார்

டாக்டர் விஜயகமூர்த்தியும் திரு. ரோனியும் நடுவர்களாகக் கடமை ஆற்றினர். (இ-எ)

### கர பந்தாட்டப் பயிற்சி

யாழ்ப்பாணம், பெப் 11 யாழ் மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட பயிற்சி முகாம் கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் 14 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் ஒரு மணி வரை நடைபெறும்.

கரபந்தாட்டப் பிரியர்கள், வீரர்கள், பயிற்றுனர்களாக வர விரும்புபவர்கள், மத்தியஸ்தம் செய்ய விரும்புபவர்கள் அனைவரும் இப்பயிற்சி முகாமில் பங்குபற்ற முடியும்

பயிற்சி முகாமில், விரிவுரைகளையும் செய்முறைகளையும் அனுபவமும் ஆற்றலும் மிக்க திருவாளர்கள் கே. குணரட்னம், கே ஏகாம்பரம், ஆர். இரத்தினம், எம். பத்மநாதன், கப்டன் டி. ஏ எம். குணசிங்கம் ஆகியோர் நடத்துவர். (இ)

### மட்டுவில் மகாவித்தியாலய இல்லப் போட்டி

சாவகச்சேரி, பெப் 11 மட்டுவில் மகாவித்தியாலய இல்லங்களின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் இம் மாதம் 20 ஆம் திகதி நடைபெறும்.

இதனையொட்டி இல்லங்களுக்கிடையிலான கர பந்தாட்ட, உதைபந்தாட்ட தாச்சி, வலை பந்தாட்டப் போட்டிகள் ஆரம்பமாகி உள்ளன. (இ-31)

### சாவகச்சேரியில்

கொடிகாமம், பெப். 11 சாவக்ச்சேரி இந்துக் கல்லூரியின் இல்ல விளையாட்டுப் போட்டி இன்று 11 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறும்.

சாவகச்சேரி வட்டாரக்கல்வி அதிகாரி திரு. அ. தங்கராசா பிரதம விருந்தினராக் கலந்து கொள்வார். (இ-75)

### தேசிய சந்தை சுண்டிக்குளியில்

யாழ்ப்பாணம், பெப்.11 யாழ் நீரக வடமாணிக்கைக்கு அருகில் இயங்கி வந்த விற்பனை அபிவிருத்தித் திணைக்களத்தின் தேசிய சந்தை பொதுமக்களின் நன்மை கருதி மீண்டும் சுண்டிக்குளியில் அடுத்த வாரம் முதல் இயங்கவுள்ளது

நாளாந்த பாவனைப் பொருள்கள், மரக்கறி வகைகள், திணைக்களத் தயாரிப்பான பழரச வகைதனை இக்கிளையில் பொதுமக்கள் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. (இ-எ)

### சாயிசமித்தி

உடுப்பிட்டி, பெப் 11 அரவெட்டி வதிரியில் புதிதாக சத்தியசாயி சமித்தி ஒன்று கட்டி முடிக்கப்பட்டது (இ-157)

### திருவிழாவும் வெளியீட்டு விழாவும்

யாழ்ப்பாணம், பெப்.11 உசன் கந்தசாமி கோயில் நாளை வியாழன் தைப்பூசத் திருவிழாவை ஒட்டி தெப்பத் திருவிழாவும் நூல் வெளியீட்டு விழாவும் நடைபெறவுள்ளன

துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில், பௌராணிக வித்தகர் குகசர்மாவின் திருப்பள்ளியெழுச்சிப் பாடல்நூல் வெளியீட்டு விழா இடம் பெறும்

இவ்விழாவில் பௌராணிக வித்தகர் குகசர்மா, பேரம்பலம் ஆகியோர் பொன்னுடை போர்த்துக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

நாளை மறுதினம் வெள்ளியன்று முருகப் பெருமானுக்கு தமிழ் மக்களின் இன்னல்களை துடைக்கவேண்டி அபிடேக ஆராதனைகள் இடம்பெறும். (இ-5)

## மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

# அனுராதபுரத்திலும் எரிபொருள் கட்டுப்பாடு

கொழும்பு பெப்.11 அனுராதபுரத்திலுள்ள பெற்றோல் நிலையங்களில் லொறிகள் கார் மற்றும் மோட்டார் வாகனங்களில் உள்ள கொள்கலன்களுக்குத்தான் எரிபொருள் விநியோகிக்கப் படும்.

புறம்பாகக் கொண்டு செல்லப்படும் கொள்கலன்களுக்குள் எரிபொருள் வழங்கப்படமாட்டாது.

அனுராதபுரம் அரச அதிபர் தலைமையில் நடந்த மாநாடு ஒன்றில் மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

யாழ் குடாநாட்டுக்கு எரிபொருள் கொண்டு போவதைத் தடுக்கவே இந்த நடவடிக்கை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மண்ணெண்ணெய் விநியோகத்துக்கு இக் கட்டுப்பாடு இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

இதனிடையில் வட பகுதி செல்லும் சகல லொறிகளும் மதவாச்சியில் வைத்து பூரணமாக சோதிக்கப்படுகின்றன.

மாலை 6 மணிக்கு பின்னர் மதவாச்சி வரும் லொறிகள் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன (இ-எ)

### சிப்பாய்கள் தேடும் பொருள்கள்!

யாழ்ப்பாணம்பெப்11 வெளிநாட்டுப் பார்சல்களில் வரும் 'சென்ற்'போத்தல்கள் லைட்டர்கள், போல்ட் பொயின்ட் பேனுக்கள் ஆனையிறவு தடைமுகாமில் உள்ள சிப்பாய்களுக்கு தேவைப்படுகின்றனவாம்.

வெளிநாட்டில் இருந்துயாழ்ப்பாணத்துக்கு லொறிகள் மூலம் கொண்டுவரப்படும் பார்சல்களிலேயே சிப்பாய்கள் இவற்றைத் தேடுகின்றனர்.

ஆனையிறவு முகாமில் சோதனை நடத்தும் சிப்பாய்களே லொறிகளில்வரும்இப் பார்சல்களில் இருந்து இவைகளை எடுக்கின்றனராம். (இ-10)

### பொது நூலக சிறுவர் பகுதி

யாழ்ப்பாணம், பெப் 11 யாழ் அபிவிருத்திச் சபையின் உடுவில் உப அலுவலகப் பகுதியில் பொது நூலகச் சிறுவர் பகுதி எதிர்வரும் சனிக்கிழமை காலை அபிவிருத்திச்சபை உதவிச் செயலாளர் திரு. க. பரமநாதனால் திறந்து வைக்கப்படும். (இ-எ)

# கிராம எழுச்சித்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி அடையும் கிராமங்கள்

யாழ்ப்பாணம், பெப். 11 ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்தும் ஒவ்வொரு பின்தங்கிய கிராமம் தேர்ந்தெடுக்கப் பட்டு கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் புதுப்பிக்கப் படும்.

யாழ் மாவட்ட விடமைப்பு அதிகார சபை இதற்கான நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது.

அதன் உதவி முகாமையாளர் ஆர் செல்வராசா இதனைத் தெரிவித்தார்.

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வேம்பிராய் கிராமமும், பருத்தித்துறை உ. அ. அ. பிரிவில் பொலிகண்டிக் கிராமமும், சாவகச்சேரி உ. அ. அ. பிரிவில் கெப்பெலி கிராமமும் தெல்லிப்பளை உ, அ. அ. பிரிவில் கும்பளை கிராமமும், நெடுந்திவு உ. அ. அ பிரிவில் நெடுந்திவு மத்தி கிராமமும், உடுவில் உ. அ. அ பிரிவில் ஈவினை கிராமமும், சங்கானை உ அ. அ பிரிவில் காட்டுப்புலம் கிராமமும், வேலணை உ. அ. அ. பிரிவில் மண்கும்பான் கிராமமும் ஊர்காவற்றுறை உ. அ. அ பிரிவில் மாதடை கிராமமும், கரவெட்டி உ. அ. அ. பிரிவில் காட்டுப்புலம் கிராமமும், சண்டிலிப்பாய் உ அ அ பிரிவில் கோட்டைக்காடு கிராமமும் தெரிவு செய்யப்பட்டுள்ளன. (இ-5)


## பிரயாண ஒழுங்குகள்

● ஒமான் ● குவைத் ● சவூதி

ஆகிய நாடுகளுக்கான தொழில் வாய்ப்புடன் செல்ல விரும்புவோர் உடன் எம்மிடம் தொடர்பு கொள்ளவும்

கடிதமூலம் தொடர்பு கொள்வோர் முத்திரை ஒட்டிய கவருடன் தொடர்பு கொள்ளவும்

எமது முகவர் நிலையத்தினுல் பயணம் மேற்கொள்வோரின் பெயர் விபரங்களை வாரந்தோறும் வெளியிடுகிறோம் எமக்கு வட பகுதியில் வேறு கிளைகள் கிடையாது

உங்கள் (PASSPORT) கடவுச் சீட்டுக்கள் குறித்த தவணையில் குறைந்த செலவில் செய்து தரப்படும்.

எம்மிடம் (PASSPORT) விண்ணப்பப் படிவமும் எல்லா நாட்டிற்கான சகலவிதமான முத்திரைகளும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

யாழ் முகவரி:
A. பத்மதாஸ்
மதுரா வீடியோ கிளப்,
இல 96, 4-ம் குறுக்குத் தெரு.
சின்னக்கடை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23549

கொழும்பு முகவரி:
HORIZON ENTERPRISES
No 87 8/1, Kollupittiya Lane,
Kollupittiya, COLOMBO-3.
T-phone: 574000


# பொருளாதாரத் தடையின்மூலம் மக்களைக் கொல்லுகிறது அரசு

## சுவிஸ் பத்திரிகையாளரிடம் ஒன்றிணைப்புக்குழு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப் 11 ஆயுதமூலம் மக்களைக் கொன்று குவிப்பதை உலக நாடுகள் கண்டு கொள்கின்றன; இதன் காரணமாகவே பொருளாதாரத் தடைமூலம் மக்களை அரசு கொல்கிறது

பிரசைகள் குழுக்களின் ஒன்றிணைப்புக் குழு சுவிஸ் பத்திரிகையாளரைச் சந்தித்து மேற்கண்டவாறு முறையிட்டது.

வெளிநாடுகளின் கவனத்தை ஈர்க்காதவாறு தமிழ் மக்களை படிப்படியாக பட்டினி போட்டு கொல்வதில் அரசு ஈடுபட்டுள்ளது.

எமதுநாட்டுக்கு வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் நிதி சிங்களவரின் அபிவிருத்திக்கும் தமிழரைக் கொல்லவுமே பயன்படுத்தப்படுகின்றது.

சிங்களவரின் தலைவர்களாகவே கருதுகின்றனர்; நாட்டுத் தலைவர்களாக நினைக்கின்றார்கள் இல்லை.

இப்படி பிரசைகள் குழுவின் ஒன்றிணைப்புக் குழுப் பிரமுகர்கள் சுவிஸ் பத்திரிகையாளரிடம் தெரிவித்தனர்.

இதனிடையில் "சுவிஸில் இருந்து எம் பிள்ளைகளைத் திருப்பி அனுப்ப வேண்டாம் என்று சுவிஸ் அரசுக்குத் தெரிவியுங்கள்" - இப்படி சுவிஸில் உள்ள தமிழ் அகதிகளின் பெற்றோர்கள் சிலர் சுவிஸ் பத்திரிகையாளரைச் சந்தித்து விண்ணப்பித்துக்கொண்டனர்.

சுவிஸில் இருந்து திருப்பி அனுப்பப்படும் தமிழ் இளைஞர்கள் கொழும்பில் சித்திரவதைப் படுத்தப்படுகின்றார்கள் என்றும் பெற்றோர்கள் குழு சுவிஸ் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தது. (இ-எ)

### சிரங்கு

வட்டுக்கோட்டை, பெப்.11 ... அராலி, சித்தன்கேணி, ... களில் தற்போது சிரங்கு நோய் பரவி வருகின்

### சைவசமய தீட்சை

யாழ்ப்பாணம், பெப்.11 வேலணை சைவ சிறார்களுக்கு தைப்பூசமான வியாழக்கிழமை சைவ சமய தீட்சை வழங்கப் படும்.

வேலணை சைவ சேவா சங்கம் இதனை ஒழுங்கு செய்துள்ளது.

வேலணை மேற்கு குருக்... தில்சர்கத்தலைவர் சிவஸ்ரீ ... தக் குருக்கள் இச் சமய நிகழ்ச்சிக்குத் தலைமை

# இலக்கிய வளர்ச்சிக்கு ஆக்க பூர்வ விமர்சனம் தேவை

## வெளியீட்டு விழாவில் பேராசிரியர் சிவத்தம்பி

யாழ்ப்பாணம், பெப்.11 தமிழ்ப் பகுதிகளில் இலக்கிய வளர்ச்சியில் இப்போது ஒரு புத்துயிர்ப்பைக் காணமுடிகிறது. திடீரெனத்தோன்றிய புதிய சூழ்நிலை இதற்குக் காரணம் எனலாம். எமது மண்ணில் இலக்கியத் துறை மேலும் வளர்வதற்கு ஆக்கபூர்வமான விமர்சனம் அவசியம்.

இவ்வாறு பேராசிரியர் திரு. கா. சிவத்தம்பி தெரிவித்தார்.

எழுத்தாளர் திரு டானியல் அன்ரனியின் "வலை" என்ற சிறுகதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழா கடந்த சனிக்கிழமை நடைபெற்றது அங்கு நூல் ஆய்வுரை ஆற்றியபோதே பேராசிரியர் சிவத்தம்பி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

விழா நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் சென் மேரிஸ் சனசமூக நிலைய தலைவர் திரு. ம. டானியல் தலைமையில் நடைபெற்றது.

பங்குக்குரவர் அருட் திரு பி. எம். இம்மனுவல் மங்கள விளக்கேற்றி வைத்தார்.

"நூல் வெளியீட்டு விழாக்கள் இப்போது சம்பிரதாய பூர்வமானவை ஆகிவிட்டன. இலக்கியம் வளர்வதற்கு அதுமட்டும் போதாது. விமர்சனமும் தேவை. எனவே விமர்சனத் துறையை இலக்கிய வளர்ச்சியாகக் கருதி யாழ்ப்பாணத்துப் பத்திரிகைகள் அதற்கு உரிய இடம் கொடுக்க வேண்டும்" - என்றும் பேராசிரியர் திரு கா. சிவத்தம்பி தமது உரையில் மேலும் குறிப்பிட்டார்.

கலாநிதி திரு. சி. மௌனகுரு பேசுகையில், கிராமத்து மக்களின் வாழ்க்கையை 'வலை'சிறுகதைத் தொகுதி பிரதிபலிக்கிறது என்று சொன்னார்.

டானியல் அன்ரனியின் சிறுகதைகளில் சமூக உணர்வு காணப்படுகிறது என்று சாவகச்சேரி உதவி அரச அதிபர் திரு. கே. சண்முகலிங்கம் சொன்னார்.

கலாநிதி சோ. கிருஷ்ணராஜா, திரு. எஸ். திருச்செல்வம், திரு. கே. ஆர். டேவிட், திரு. எம். வி. கானமயில்நாதன், திரு. ஐ. சண்முகலிங்கம் உட்படப் பலர் பேசினர்.

நூலாசிரியர் திரு. டானியல் அன்ரனி பதிலுரை நிகழ்த்தினார்.

வெளியீட்டுரையை திரு நந்தினி சேவியர் நிகழ்த்தினார். (அ-எ)

### பேச்சுப் போட்டிகள்

கொடிகாமம், பெப். 11 சரசாலை இந்து இளைஞர் மன்றமும் சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலய கூட்டுப் பிரார்த்தனைச் சபையும் இணைந்து பேச்சுப் போட்டிகள் நடத்தவுள்ளன.

இப்பேச்சுப் போட்டிகள் யாவும் மஹா சிவராத்திரி தினமான இம் மாத 26ஆம் திகதி சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

மாணவர்கள், மாணவரல்லாதோர்களுக்கென கீழ்ப்பிரிவு மத்தியபிரிவு, மேற்பிரிவு என மூன்று பிரிவுகளாக போட்டிகள் இடம் பெறும்

பங்குபற்ற விரும்புவோர் 23ஆம் திகதிக்கு முன் தம்முடன் தொடர்புகொள்ளுமாறு சரசாலை இந்து இளைஞர் மன்றத்தினர் கேட்டுள்

# நெடுங்கேணி நீர் விநியோக திட்டம் கஷ்டத்தில்

நெடுங்கேணி, பெப்.11 நெடுங்கேணி நீர் விநியோகத்திட்டம் பெரும் நட்டத்தில் இயங்குவதாக அறிவிக்கப்படுகிறது.

நீர் விநியோகத்தைப் பெறுவோர்களிடம் இருந்து மாதந்தோறும் 700 ரூபாவே மாவட்ட அபிவிருத்திச் சபையின் நெடுங்கேணி உப அலுவலகத்தினால் அறவிடப் படுகிறது.

ஆனால் உப அலுவலகம் மாதம் 12,000 ரூபாவை நீர் விநியோக சபைக்குச் செலுத்த வேண்டியிருக்கிறது.

உப அலுவலகம் இது வரை நீர் விநியோக சபைக்குச் செலுத்த வேண்டிய நிலுவைப் பணம் 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபா ஆக அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் நீர் விநியோகத் திட்டத்தை நீர் விநியோகசபையிடம் கையளிப்பது சிறந்தது என்றும் அல்லது மூடிவிடுவது நல்லது என்றும் அதிகாரிகள் அபிப்பிராயப்படுகின்றனர்.

### மண்டைதீவில் அறுவடை

மண்டைதீவு, பெப். 11 மண்டைதீவு பகுதியில் பெரும்போக அறுவடை வேலைகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன.

கடந்த வருடத்தைப் போல் இம் முறையும் கூலியாட்களைப் பிடிக்க முடியாமல் கமக்காரர்கள் அவதிப்படுகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

அன்பு பொழியுமிடம் சொர்க்கம்
மனமே, நீ அன்பில் ஊறி வளர்க!
— சுவாமி சித்பவானந்தா


# உதயன்

இல. 15, 2ஆவது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் — தொலைபேசி: 24805, 22073

11-02-1987 த.பெ.இல 23


## இந்திய அரசே எதைச் செய்வாய்?

இலங்கைத் தமிழரை அழிவிலிருந்து காப்பாற்ற இந்தியா தலையிட வேண்டும். இவ்வாறு தமிழகத்தில் இயங்கும் நான்கு அமைப்புகள் இந்திய அரசாங்கத்துக்கு கூட்டாக வேண்டுகோள் விடுத்திருக்கின்றன.

இலங்கைத் தமிழரை அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்ற கோரிக்கை, இந்திய அரசுக்கு புதிதல்ல. 1983-ஆம் ஆண்டு தொடக்கம் எத்தனையோ தடவைகள், எத்தனையோ அமைப்புகளால் விடுக்கப்பட்ட கோரிக்கை.

ஈழத்தமிழர்களின் அமைப்புகளும், பொது நல ஸ்தாபனங்களும் மட்டுமன்றி தமிழகத்தில் உள்ள அரசியல் அமைப்புகளும், பொது நல ஸ்தாபனங்களும் ஒலித்த குரல். அகில இந்திய ரீதியான அரசியல் கட்சியினரும், அரசியல் தலைவர்களும் கூட இதே கோரிக்கையை மத்திய அரசிடம் பல தடவைகள் விடுத்திருந்தனர்.

இந்திய மத்திய அரசுக்குக் காதில் கேட்டுக் கேட்டுப் புளித்துப்போன ஒரு குரல் இது. இல்லை; இல்லை செவிடன் காதில் ஊதிய சங்கு என்பதுதான் மிகப்பொருத்தமானது.

யார் எதைச் சொன்னாலும், இலங்கையில் எது எப்படி நிகழ்ந்தாலும், இலங்கை அரசு எவ்வளவு அட்டூழியம் புரிந்தாலும் அல்லது எந்த விதமான தந்திரங்களைக் கையாண்டாலும் இந்திய அரசு தொடர்ந்து தனது 'சடுகுடு'ப் போக்கையே கடைப்பிடித்து வருகிறது.

இந்த விடயத்தைத் தன்னால் சரியாகக் கையாள முடியவில்லை என்பதை இந்திய அரசு வெளிப்படையாகச் சொல்லத் தவறுகிறதே அன்றி, அந்த முடிவுக்குத் தான் வந்திருக்க வேண்டும்.

ஈழத் தமிழ் மண்ணில் நாளாந்தம் மக்கள் அழிந்து கொண்டிருந்த போதிலும், இராணுவ அரசியல், பொருளாதார அடக்குமுறைகளுக்கு ஆளாகி இருந்த போதிலும், மத்திய அரசின் உத்தியோகபூர்வ தூதுக்குழு எதுவும் இப்பகுதிகளுக்கு வந்து நிலைமைகளைக் கண்டறிந்ததில்லை. ஆகக் குறைந்தது கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் அல்லது அவரது அதிகாரிகள் தானும் அவதிப்படும் தமிழ் மக்களையும், அவர்கள் அனுபவிக்கும் அவலங்களையும் நேரில் பார்த்ததில்லை. அரச அக்கிரமம் அதிகளவில் தொடங்கிய 1983ஆம் ஆண்டிற்குப் பின்னர் இந்திய அரசுப் பிரதிநிதிகள் எவரும் தமிழ் மண்ணில் காலடி வைத்ததில்லை.

நிலைமையை நேரில் பார்க்காததால் தமிழ்மக்கள் படும் இன்னல்களின் தன்மையை, பரிமாணத்தை, இந்திய மத்திய அரசினால் சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. அதனால் இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியா நத்தை வேகத்தில் நகர்ந்து கொண்டிருக்கிறது.

இந்தக் குறைபாட்டை — தவறை — இந்திய ஜனாதிபதியிடம் அண்மையில் கையளித்த மகஜரில் இந்திய எதிர்க்கட்சிகள் சரியாகப் புட்டுக் காட்டியுள்ளன.

அகில இந்திய அரசியல் கட்சிகள் மட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அந்த மகஜரில் பல உண்மையான விடயங்கள் வெளிக்கொணரப் பட்டுள்ளன.

* சிங்களவரின் மனநிலையை அறியக் கொழும்புக்குப் பல தடவைகள் சென்று வந்த இந்திய மத்தியஸ்தர்குழு, தமிழ் பகுதிகளுக்கு விஜயம் செய்து இன்னற்படும் தமிழரின் நிலையை அறிந்து கொள்ளவில்லை.
* இந்தியாவின் மத்தியஸ்தம் கேலிக்கிடமாகி விட்டது.
* இலங்கை இந்தியா மீது சவாரி விடுவது தெளிவாகிவிட்டது:
* இலங்கை அரசின் இன ஒழிப்பு நடவடிக்கையை இந்தியாவினால் நிறுத்த முடியவில்லை.
* இந்தியாவின் சமாதான முயற்சிகள் குறித்து இந்திய மக்களிற் பெரும்பாலானோரும், இலங்கைத் தமிழர்களும் ஏமாற்றம் அடைந்துவிட்டனர்
* வடபகுதித் தமிழர் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையை நீக்க இந்தியா வற்புறுத்தியும், இலங்கை செய்யாவிடின் இப்பிரச்சினையை சர்வதேச அரங்கில் இந்தியா எழுப்புதல் வேண்டும்.

மேற்கூறிய அம்சங்கள் யாவும் இப்பகுதியில் அடிக்கடி வற்புறுத்தப்பட்டதையும், தெளிவு படுத்தப்பட்டதையும் வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

இராணுவ ரீதியிலான நசுக்குதலுடன், பொருளாதார ரீதியான நசுக்குதலையும் இலங்கை அரசு தமிழர் மீது கட்டவிழ்த்து விட்டிருக்கும் இவ்வேளையிலும் இந்தியா நத்தை வேகத்தில் நகர்வது அர்த்தமற்றதாகும். 'சடுகுடு' ராஜதந்திரத்தை தொடர்வதும் பொருத்தமற்றது.

இந்திய அரசு ஆக்கபூர்வமான நடவடிக்கையில் வேகமாக இறங்க வேண்டும். இலங்கை அரசு இறங்கவில்லை என்றால் தக்க நடவடிக்கை, நிர்ப்பந்தம் செய்ய வேண்டும். அது தனக்கு முடியாத காரியம் எனப்பட்டால் மரியாதையுடன் மத்தியஸ்த அந்தஸ்திலிருந்து வாபஸ் பெற்றுக் கொள்ள வேண்டும்!

ஈழத்தமிழர் உயிரோடும், வாழ்க்கையோடும், சுதந்திரத்தோடும் மூன்று ஆண்டுகளாகக் கண்ணாமூச்சி ஆடியது போதும்!

இந்தியா தனது மத்தியஸ்தத்தைத் தொடர்வதா இல்லையா என்று முடிவு கட்ட வேண்டிய கட்டம் வந்துவிட்டது. இனியும் இழுத்தடித்துக் கொண்டிருக்கக் கூடாது.

# ஒழுங்கு நடவடிக்கைக் குழு முன் பர்ஞலாவை ஆஜராக உத்தரவு

சண்டிகார், பெப். 10

முதலமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்ய மறுத்ததைத் தொடர்ந்து திரு சுர்ஜித்சிங் பர்ஞலாவை ஒழுங்கு நடவடிக்கைக் குழுமுன் ஆஜராகும்படி சீக்கிய மத தலைமைப் பீடம் உத்தரவிட்டுள்ளது.

இன்று புதன்கிழமை குழு முன் ஆஜராகி பிரதம குருமாரின் கட்டளையை அவமதித்ததற்கான காரணத்தைத் தெரியப்படுத்தும் படி சீக்கிய மதத் தலைமைப் பீடம் முதலமைச்சர் பர்ஞலாவிற்கு உத்தரவிட்டுள்ளது.

சீக்கிய மதத் தலைமைப் பீடத்தின் கட்டளையைத் தொடர்ந்து பஞ்சாப் அரசியல் நெருக்கடி உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது.

ஒழுங்கு விசாரணைக் கமிட்டி முன் திரு. பர்ஞலா ஆஜராகத் தவறினால் அவரை சீக்கியமதத்தில் இருந்து வெளியேற்றும் உத்தரவை பிரதம குருமார் பிறப்பிக்கலாம்.

உத்தரவுக்குப் பணிந்து குழு நடத்தும் விசாரணையில் பங்குபற்றினால் பர்ஞலா அரசை மத்திய அரசு கலைத்து விடும் அபாயமும் உண்டு. (இ-எ)

### மேற்கத்திய சிந்தனைக்கு எதிர்ப்பு இல்லை

பீகிங், பெப். 10

மேற்கத்திய சிந்தனைகளுக்கு எதிரான இயக்கத்தை கிராமப் புறங்களில் நடத்துவது இல்லை என்று சீன அரசாங்கம் தீர்மானம் பற்றிய அறிக்கையை சீன நாளிதழான 'மக்கள் தினசரி' வெளியிட்டது (இ-எ)

### டில்லியில் ஆப்கன் மந்திரி

புதுடில்லி, பெப். 10

ஆப்கன் வெளியுறவு அமைச்சர் கடந்த திங்கள் புதுடில்லி விஜயம் செய்து ஆப்கன் நிலைமை குறித்து இந்தியப் பிரதமரிடம் விளக்கினார்.

ரஷ்யத் துருப்புகளை ஆப்கனில் இருந்து விலக்கிக் கொள்வது சம்பந்தமான பேச்சுக்களில் காணப்பட்டுள்ள முன்னேற்றம் பற்றியும் பிரதமருக்கு அப்போது தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

## வெளி உலகில்

### ஆசிய பசுபிக் பாதுகாப்புக்கு ரஷ்ய பலம் ஆபத்தாம்

புதுடில்லி, பெப் 10

ஆசிய, பசுபிக்பிராந்திய பாதுகாப்புக்கு பெரும் அபாயமாக இருப்பது ரஷ்யாவின் இராணுவ பலம் அதிகரிப்பதே.

இப்படி கனடாவின் வெளியுறவு அமைச்சர் ஜோ கிளார்க் சொன்னார்.

பிராந்திய பதற்ற நிலைமையை சீராக்க இருக்கும் ஒரு வழி ஆப்கனில் இருந்து ரஷ்யா தனது துருப்புக்களை விலக்கிக் கொள்வதே ஆகும்.

இப்படி அமைச்சர் ஜோ கிளார்க் தெரிவித்தார். (இ-எ)

### துருப்புகளை விலக்க கோரிக்கை

ரியாட், பெப் 10

சாட் நாட்டில் இருந்து லிபியா, பிரான்ஸ் நாடுகளின் துருப்புக்கள் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும்.

இப்படி ஆபிரிக்க நாடுகளின் ஒற்றுமைச் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (இ-எ)

### பெரு கண்டனம்

பெரு, பெப் 10

பெரு நாட்டுச் சிறைகளில் 100க்குமேற்பட்ட கைதிகளை ஆயுத படைபடையினர் படுகொலை செய்தனர் என்று சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்த குற்றச்சாட்டை, பெரு அரசு வன்மையாகக் கண்டித்துள்ளது. (இ-எ)

### சீன - ரஷ்ய பேச்சுக்கள் ஆரம்பம்

மாஸ்கோ, பெப். 10

30 ஆண்டுகளாக நிலவும் சீன-ரஷ்ய எல்லைத் தகராறு பற்றிய பேச்சுக்கள் மாஸ்கோவில் மீண்டும் கடந்த சனிக்கிழமை ஆரம்பமாகின.

9 ஆண்டுகளின் பின்னர் முதல் தடவையாக சீனக்குழு ஒன்று உதவிப் பிரதமர் தலைமையில் இதற்காக மாஸ்கோ சென்றுள்ளது.

இப் பேச்சுக்கள் பலனளிக்கக் கூடியவையாக அமையும் என்று ரஷ்ய அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்தனர். (இ-எ)

### பணயக் கைதிகளை கொல்லும் முடிவு ஒத்திவைக்கப்பட்டது

பெய்ரூட், பெப். 10

பணயம் வைக்கப்பட்டுள்ள 4 பேராசிரியர்களை தற்போது கொல்லப் போவது இல்லை என்று கடத்தல்காரர்கள் அறிவித்துள்ளனர்.

திங்கள் நள்ளிரவு நால்வரையும் கொல்லப் போவதாக கடத்தல் காரர்கள் முன்னர் அறிவித்திருந்தனர்.

நள்ளிரவு 12 மணிக்கு 5 நிமிடங்கள் இருக்கையில் எழுத்து மூலமான அறிக்கையில் பேராசிரியர்களைக் கொல்வதை மறு அறிவித்தல் வரை ஒத்திப் போட்டுள்ளதாக கடத்தல் காரர்கள் அறிவித்தனர்.

400 அரபுக் கைதிகளை விடுவிக்கும் கோரிக்கையை இஸ்ரவேல் அரசு நிராகரித்ததைத் தொடர்ந்தே கொல்லும் முடிவு முன்னர் அறிவிக்கப்பட்டது.

பணயக் கைதிகள், அவர்களின் உறவினர்கள், லெபனான் அதிகாரிகள் ஆகியோரின் வேண்டுகோளின் மீதுதான் கொல்லும் முடிவு தள்ளிப் போடப்பட்டிருப்பதாக கடத்தல் காரர்கள் அறிவித்துள்ளனர்.

இதனிடையில் பணயக் கைதிகளை விடுவிக்க கடத்தல் காரர்களுக்கு பணம் ஏதும் வழங்கப்படமாட்டாது என்று அமெரிக்க ராஜாங்க அமைச்சர் ஜோர்ஜ் ஷுல்ட்ஸ் அறிவித்து உள்ளார்.

# வடக்கில் போராட்ட நடவடிக்கைகளைக் குறைத்து பொருளாதார ஆய்வுகள்

## ஈரோஸ் பாலகுமார் கூறுகிறார்

சுவிஸ் பத்திரிகையாளர்கள் சமீபத்தில் யாழ்ப்பாணம் வந்திருந்த போது ஈரோஸ் பிரமுகர் திரு. வி. பாலகுமாரையும் சந்தித்தனர்.

அவர்களுடன் எமது செய்தியாளரும் சென்றிருந்தார். அப்பொழுது தரப்பட்ட தகவல்களைக் கேள்வி பதிலாகத் தருகிறோம்.

**கேள்வி:** சகல விடுதலை இயக்கங்களையும் தடை செய்துள்ள விடுதலைப் புலிகளுக்கும் உங்களுக்கும் இடையிலான உறவு எப்படிப்பட்டது?

**பதில்:** எமக்கும் அவர்களுக்கும் இடையில் எந்தவித இரகசிய உடன்பாடும் இல்லை எந்த வித முரண்பாடும் இல்லை. 1975 ஆம் ஆண்டு முதலே நாம் சகல இயக்கங்களுடனும் புரிந்துணர்வின் அடிப்படையில் எவ்வித முரண்பாடுமின்றி இயங்கி வருகிறோம்.

விடுதலைக்காக போராடும் சகல இயக்கங்களையும் நாம் வரவேற்கிறோம். எமக்குள் எழும் பிரச்சினைகளை நாம் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என நம்புகின்றோம்.

**கேள்வி:** உங்களுக்கும் மற்றைய இயக்கங்களுக்குமான வித்தியாசம் என்ன?

**பதில்:** தென் இலங்கையில் யுத்தம் செய்பவர்கள் நாங்கள் மட்டுமே. எமது இயக்கத்தில் தனிநபர் வழிபாடு இல்லை. தலைமை என்பது எமதியக்கத்தில் ஒரு குழுவிடம் கொடுக்கப்பட்டுள்ளது ஈழ எல்லையைப் பொறுத்தவரை நாம் மற்றவர்களிடம் இருந்து மாறுபடுகின்றோம்.

தமிழர் வாழும் சகல பிரதேசங்களையும் நாம் எல்லையாக கொண்டுள்ளோம். வடக்கில் யுத்த வேலைகளைக் குறைத்து பொருளாதார ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம்.

**கேள்வி:** பொருளாதார ஆய்வு நடவடிக்கைகள் என்று எதைக் குறிப்பிடுகிறீர்கள்?

**பதில்:** இன்று அரசு களை நாம் ஏற்கனவே எதிர்பார்த்தோம். இவற்றை எதிர்கொண்டு முகம் கொடுக்கத்தக்க வகையில் மக்களுக்கு ஆய்வுகளை வழங்கியிருந்தோம்.

எரிபொருள், மின்சாரம் போன்றவையின் உதவி இன்றி இயங்கும் பல உபகரணங்களை அறிமுகப்படுத்தியிருந்தோம். எமது மண்வளத்திற்கேற்ப நீண்ட நாள் பாதுகாக்கக்கூடிய உணவு வகைகளை அறிமுகப்படுத்தியிருந்தோம்.

**கேள்வி:** இன்றைய அரசின் பொருளாதாரத் தடைகளுக்கும், கிழக்கின் படுகொலைகளுக்கும் காரணம் என்னவென்று கருதுகிறீர்கள்?

**பதில்:** இன்று இந்தியா எமது நிலைபற்றித் தெளிவாக இல்லை. பந்து ஜே. ஆரிடமா ராஜீவிடமா என்று நிச்சயமாக கூற முடியாதநிலை. இதனை தனக்கு சாதகமாக இலங்கை அரசு பயன்படுத்துகிறது.

**மின்சாரத்தடை**

**கேள்வி:** எரிபொருள் தடையைத் தொடர்ந்து அரசு மின்சாரத் தடையைக் கொண்டு வராதா?

**பதில்:** வரலாம் என எதிர்பார்க்கிறோம்.

**கேள்வி:** அப்படி மின்சாரத் தடை வந்தால் என்ன செய்வீர்கள்?

**பதில்:** நாம் அரசிடமிருந்து எம்மைப் படிப்படியாக துண்டாக, பிரிய விரும்புகின்றோம்.

இதையே ஒவ்வொரு தடைகள் மூலம் அரசு செய்துவருகிறது. அதை நாம் வரவேற்கிறோம்.

யுத்தம் என்று வந்துவிட்டால் இவை சகசம். மக்கள் இப்படியான கஷ்டங்களுக்குத் தம்மை தயார் படுத்திக்கொள்ள வேண்டும். இதற்காக தான் நாம் ஏற்கனவே மின்சாரமின்றி எமது பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான முறைகளை ஆய்வுகள், பொருட்காட்சிகள் மூலம் மக்களுக்கு தெரிவித்துள்ளோம் தெரிவித்து வருகின்றோம்.

[illegible] மூலம் இயக்கங்களை பல [illegible] நிலைக்கிறது மக்கள் இயக்கங்கள் மீது வெறுப்புக் கொள்வர் என எதிர்

கள் அப்பாவிச் சிங்கள மக்களை தாக்குகிறார்கள் என்று கூறப்படுகிறதே?

**பதில்:** அப்படியான நிகழ்வுகளை நாம் முழுமையாக, வன்மையாக் கண்டிக்கிறோம். அப்படியான தாக்குதல்கள் தூர் அறிகுறியே

**ஒப்ரோய் தாக்குதல்**

**கேள்வி:** கொழும்பில் ஈரோஸ் செய்த தாக்குதல்களால் பொது மக்களும் பாதிக்கப்பட்டனரே!

**பதில்:** அரசிற்குபொருளாதார ரீதியான தாக்கங்களை கொடுக்கவே நாம் தென்பகுதியில் பல தாக்குதல்களை மேற்கொண்டோம். இதில் மிகச் சிறிய எண்ணிக்கையான சிங்களவரே பலியாயினர். சிங்களப் பொது மக்கள் பலியாகக் கூடாது என்ற நோக்கத்துடன் தான் தாக்குதல் இலக்குகளை கொழும்பில் தெரிவு செய்கிறோம். இதில் நாம் மிக அவதானமாகவே உள்ளோம்.

இலங்கையின் பெரிய ஹோட்டல்களில் ஒன்றான ஒப்பரோய் ஹோட்டலுக்கு குண்டு வைத்ததன் மூலம், அரசிற்கு உல்லாச பிரயாணிகள் மூலம் வந்த பெருமளவு வருமானம் நிறுத்தப்பட்டது.

**கேள்வி:** வெளிநாட்டவர்கள் இங்கே வருவது உண்மை நிலையை அறிய உதவுமல்லவா?

**பதில்:** பத்திரிகையாளர்களை பொறுத்தவரை பரவாயில்லை. ஆனால் உல்லாசப் பிரயாணிகள் கொடுக்கும் பணம் மனிதக்கொலைகாரர்களுக்கே பயன்படுகிறது

மேலும் உல்லாசப் பிரயாணிகள் இங்கே நடைபெறும்யுத்தத்தில் இடை நடுவில் அகப்பட்டு பலியாகக் கூடாது. அதனாலேயே அவர்களை இங்கே வர வேண்டாம் என கேட்டுள்ளோம்.

**எயர்லங்கா**

**கேள்வி:** எயர்லங்கா விமானத்தில் குண்டு வெடித்ததற்கும் உங்களுக்கும் தொடர்புண்டா?

**பதில்:** நிச்சயமாக இல்லை. [illegible] குண்டு வெடிப்புச் சம்பவத்திற்கும் எமக்கும் தொடர்பும் இல்லை.

**கேள்வி:** மலையகத்தில் உள்ள மக்களுடன் உங்கள்

அரசியல் மயப்படுத்துகின்றோம். நிச்சயமாக அவர்களை நாம் வன்முறைக்கு தூண்டிவிடப் போவதில்லை.

தமிழர்களை விட மலைநாட்டுத் தமிழர்கள் அதிகம் துன்பங்களை கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள் என்ற வகையில் அவர்களுக்காக நாம் போராடத் தயாரானோம்.

இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர் என்ற பாகுபாட்டை நாம் விரும்பவில்லை, தமிழ் பேசும் மக்கள் எல்லோரையும் நாம் கருதுகின்றோம்.

**கேள்வி:** மலையக மக்களுக்கு அரசு பிரஜாவுரிமையை வழங்க முன்வந்ததால்?...

**பதில்:** பிரஜாவுரிமை உள்ள தமிழர்கள் ஏதாவது சுதந்திரத்தை அனுபவிக்கிறார்களா? அவர்களுக்காவது தமது சொந்த பிரதேசத்தில் பாதுகாப்பு உள்ளதா? இல்லையே

**கேள்வி:** போராளிகள் ஆயுதங்களை போட்டு விட்டால் பிரச்சினையைத் தீர்க்கலாம் என அரசு கூறுகிறதே?

**பதில்:** நாம் ஈழம் கேட்டதன் நோக்கம் எமது சொந்த பிரதேசத்திலேயே எமக்கு பாதுகாப்பு இல்லை என்பதாலேயே.

எமது பாதுகாப்பு நிச்சயப்படுத்தப் பட்டால் நாம் ஆயுதத்தை கையில் ஏந்தத் தேவையில்லையே?

**கேள்வி:** இந்திய மத்தியஸ்தத்தை விலக்கி விட்டு, அரசு தனிப்பட்ட ரீதியில் உங்களுடன் பேச வந்தால் பேச்சுவார்த்தையில் ஈடுபடத் தயாரா?

**பதில்:** ஒரு போதும் இல்லை. அரசு தனது செய்கைகள், முன்வைக்கும் திட்டங்கள் மூலம் எமக்கு நம்பிக்கையை ஊட்ட வேண்டும். அப்போதுதான் நாம் பேச்சுவார்த்தையை பற்றி சிந்திக்கலாம்.

வெறுமனே எம்மையும் பிரச்சினையையும் இழுத்தடிக்கவும், இந்தியாவிடமிருந்து எம்மை பிரிக்கவும் ஒரு பேச்சுவார்த்தைக்கு அரசு



## பொய்யாமொழி

குறள்:

படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு

பொருள்:

படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என்று கூறப்படும் ஆறு அங்கங்களையும் உடையவனே அரசருள் ஆண் சிங்கம் போன்றவன்.

## செய்திக்கொத்து

### நியமனம்

முழங்காவில், பெப் 11

காலஞ்சென்ற கே. சதிரமலையின் இடத்திற்கு சர்வோதய கிளிநொச்சி மாவட்டப் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய திரு கே. சிவசுப்பிரமணியத்தை இலங்கை சர்வதேச இயக்கத் தலைவர் ஆரியரட்ண சர்வோதய வடபகுதி வெளிக்கள இயக்குனராக நியமித்துள்ளார். (இ-87)

### நிரந்தரம்

ஊர்காவற்றுறை, பெப். 11

யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபையின் நாரந்தனை உப அலுவலகத்தில் தற்காலிக ஆயுள்வேத வைத்திய அதிகாரியாகக் கடமையாற்றிய திரு. எஸ். பாலசுப்பிரமணியம் இவ்வருடம் தொடக்கம் ஏழாலை உப அலுவலகத்தில் நிரந்தர ஆயுள்வேத வைத்திய அதிகாரியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார் (இ-16)

### பிரதம எழுதுநர்

ஊர்காவற்றுறை, பெப். 11

யாழ்ப்பாண அபிவிருத்திச் சபையின் நாரந்தனை உப அலுவலகத்தின் பிரதம எழுதுநராக திரு சி. அம்புரோஸ் பதவியேற்றுள்ளார். (இ-16)

### பிரயாணிகள் தங்குமடம்

உடுப்பிட்டி, பெப். 11

வரணியில் 25,000 ரூபா செலவில் பிரயாணிகள் தங்குமடம் ஒன்று கட்டப்பட்டுள்ளது.

வரணி மிஷன் பணியினால் இந்தத் தங்குமடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது (இ-157)

### காந்திஜிநினைவு தினம்

சாவகச்சேரி, பெப். 11

அறவழிப் போராட் கொண்டாடப்பட்டது.

குழுவின் தலைவர் திரு. வி. எஸ் துரைராசா தலைமையில் இடம் பெற்ற இந் நிகழ்ச்சியில் இளைப்பாறிய அதிபர் திரு செ. சிவலிங்கம் "இன்றைய வாழ்வில் காந்தீயம்" என்னும் பொருள் பற்றி சிறப்புரை நிகழ்த்தினார்;

செயலாளர் திரு. க. ஜீவகதாஸ், திரு. ஜீ. எஸ். தங்கராசா, திரு. சண்முகதாஸ் ஆகியோரும் உரையாற்றினார்கள். (இ-31)

### உதவி அரசஅதிபர்

மண்டைதீவு, பெப். 11

வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு எஸ். சந்திரசேகரம் இம்மாதம் முதல் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபராக இடமாற்றம் பெற்றார்.

இவரது இடத்துக்கு திரு. மு சடாட்சர சண்முகதாஸ் நியமனம் செய்யப்பட்டார். (இ-88)

### சிறுகதை போட்டி

ஊர்காவற்றுறை, பெப் 11

காவலூர் இலக்கிய வட்டம் அகில இலங்கை ரீதியில் சிறுகதைப் போட்டி ஒன்றை நடத்த முன்வந்துள்ளது

சமகால பிரச்சினைகளை மையமாகக் கொண்டு சிறுகதைகள் படைக்கப் படும். (இ-16)

## சமய சந்திகளில்

### வீரகத்திவிநாயகர் கோயிலில்

யாழ்ப்பாணம், பெப். 11

வண் கிழக்குக்கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் தைப்பூச விழா நாளை வியாழன் நடைபெறவுள்ளது.

விநாயகப் பெருமானுக்கு மாலை 5 மணிக்கு ஸ்நபன அபிஷேகம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது!

ஆர்த்தி ஜுவல்லர்ஸ்

* தரமான வர்ண நிழற்படப் பிரதிகளை
* கம்பியூட்டர் முறையில்
* குறைந்த செலவில்
* சிறந்த சேவையில்
பெற்றுக்கொள்ளலாம்.

# உதயன்

11 - 02 - 1987 புதன்கிழமை

* வர்ணப் புகைப்படப் பிரதி ஒன்று
ரூ. 5/- மட்டுமே!
* ProcessingFree(நெகடிவ்செய்யஇலவசம்)
* வர்ண புகைப்படச் சுருள்கள் விற்பனைக்கு
KODAK — FUJI — KONICA
SAKURA — FORTE — TUDOR

ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 23628

மன்னார் மாவட்டத்தின் பல பகுதிகளில்

## ஐயாயிரத்துக்கும் அதிகமான மக்கள் காடுகளில் தஞ்சம்

யாழ்ப்பாணம், பெப். 11

மன்னார் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் கடந்த ஐந்து தினங்களாக மேற்கொள்ளப்பட்டிருக்கும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக ஐயாயிரத்துக்கும் அதிகமான மக்கள் காடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் உள்ள மாந்தை, பரப்புக்கடந்தான், உயிலங்குளம், 9ஆம் கட்டை, பண்டிவிரிச்சான் ஆகிய பகுதிகளில் சிப்பாய்கள் மேற்கொண்டு வரும் இராணுவ நடவடிக்கைகள் காரணமாகவே மக்கள் காடுகளில் தஞ்சம் புகுந்து வருகின்றனர்.

பாடசாலைகளிலும் கோவில்களிலும் தஞ்சம் புகுந்திருப்போர் மீதும் சிப்பாய்கள் தாக்குதல் நடத்துகின்றனர் என்று தப்பி வந்தோர் தெரிவிக்கின்றனர். (இ-10)

### வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், பெப். 11

சொக்கன் எழுதிய ''சலதி'' காவியநவீனம், மொழிபெயர்ப்பான சத்தியஜித் ரேயின் பத்திக் சந்த் சிறுவர் நாவல் ஆகியவற்றின் வெளியீட்டு விழா நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நாளை வியாழன் பிற்பகல் நடைபெறும்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி வெளியீட்டுரை நிகழ்த்துவார்.

சலதி பற்றிய ஆய்வுரையை பேராசிரியர் அ. சண்முகதாஸும் பத்திக் சந்த் பற்றிய ஆய்வுரையை திரு. சோ. பத்மநாதனும் நிகழ்த்துவர்.

''சலதி'' முதல் பிரதியை மானிப்பாய் மகளிர் கல்லூரி நாட்டிய ஆசிரியை திருமதி. லீலா செல்வராஜாவும் ''பத்திக் சந்த்'' முதல் பிரதியை திரு. சி. சு வரதராசனும் பெற்றுக்கொள்வர். (இ-எ)

## ஷுல்ட்ஸ்-ஹமீத் சந்தித்துப் பேசினர்

வாஷிங்டன், பெப். 11

இனப்பிரச்சினை குறித்து அமெரிக்க ராஜாங்க அமைச்சர் ஜோர்ஜ் ஷுல்ட்ஸுடன் இலங்கை வெளிநாட்டு அமைச்சர் ஏ. ஸி. எஸ். ஹமீத் பேச்சுக்கள் நடத்தினார்.

இரண்டுநாள் விஜயமாக அமைச்சர் சாகுல் ஹமீத் அமெரிக்கா சென்றிருந்தார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண இலங்கை அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் பற்றி இலங்கை அமைச்சர் ஹமீத் அமெரிக்க ராஜாங்க அமைச்சரிடம் விவரித்தார்.

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படும் என்று நம்புவதாக அமெரிக்க ராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். (இ-எ)

## எல்லா முனைகளிலும் படைகள் முன்னேறுகின்றன என்கிறது அரசாங்கம்

கொழும்பு, பெப். 11

தமிழ்ப்பகுதிகளில் எல்லா முனைகளிலும் ஆயுதப் படையினர் முன்னேறிக்கொண்டு இருப்பதாக இலங்கை அரசு அறிவித்தது.

தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்த காட்டுப்பகுதிகளை ஆயுதப் படையினர் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருப்பதாகவும் இலங்கை வானொலி நேற்று அறிவித்தது.

மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், வவுனியா, கிளிநொச்சி, வயாவிளான் பகுதிகளில் எல்லாம் ஆயுதப் படையினரின் நடவடிக்கைகளில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளன—

இப்படி இலங்கை வானொலி மேலும் தெரிவித்தது. (இ-எ)

### உப அலுவலகம் உரக்களஞ்சியம் திறப்புவிழா

பருத்தித்துறை, பெப் 11

அம்பன் கமநலசேவை நிலையத்தின் புலோலி மேற்கு உப-அலுவலகமும் உரக்களஞ்சியமும் இன்று புதன்கிழமை காலை 10.30 மணிக்கு புலோலி மேற்கு கிராம அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. பொன் மாணிக்கவாசகர் தலைமையில் திறந்துவைக்கப்படும்.

யாழ் மாவட்ட கமநலசேவை சிரேஷ்ட உதவி ஆணையாளர் திரு. க. பரமலிங்கம் சம்பிரதாயபூர்வமாக கட்டடத்தை திறந்து வைப்பார்.

திறப்புவிழா தொடர்பான சிறப்பு மலரை யாழ் மாவட்ட விவசாய உதவிப் பணிப்பாளர் திரு எஸ். கிருஷ்ணபிள்ளை வெளியிட்டு வைப்பார்.

புலோலி மேற்குப் பகுதியில் மரம் நடும் இயக்கத்தை சிவதர்ம வள்ளல் திரு. க. கனகராசா ஆரம்பித்து வைப்பார். (இ-118)

### தமிழ் அரச அதிபர்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நியமித்துள்ளது. எனினும் அந்தப் பதவியை ஏற்க விரும்பாதவராக அவரும் அதனை ரத்துச் செய்விக்கும் முயற்சியில் கொழும்பு சென்றிருப்பதாகவும் அறியவருகிறது.

விவசாய மாவட்டத்தின் அரசாங்க அதிபர் தமது பதவியை திடீரென ராஜினாமாச் செய்வதற்கு இராணுவ அதிகாரிகளின் கடும் போக்கும், நிர்ப்பந்தமுமே முக்கிய காரணம் என அறிய வந்துள்ளது.

இது குறித்து அறியப்படுவதாவது:—

கடந்த மாத இறுதியில் சம்பந்தப்பட்ட அரச அதிபர் தமது மாவட்டத்தில் உள்ள பண்ணை ஒன்றினை உத்தியோகபூர்வமாகப் பார்வையிடச் சென்றார்.

அந்த மாவட்டத்தின் இணைப்பு அதிகாரியும் மற்றும் பல உயர்தர இராணுவ அதிகாரிகளும் பண்ணைக்கு விஜயம் செய்தனர்.

அப்போது, இராணுவ உயர் அதிகாரிகளில் பலரும், அரசாங்க அலுவலகங்கள் சிலவற்றை தாம் விரும்பும் கட்டடங்களுக்கு மாற்றுமாறு நிர்ப்பந்தித்தனராம். ஆனால் அவ்வாறு செய்வது கஷ்டம், மக்களுக்குச் சிரமத்தைத் தரும் என்று அரச அதிபர் வாதாடினாராம்.

அதன் பின்னரே அவர் ராஜினாமா முடிவை மேற்கொண்டதாக அவருடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்தன.

ராஜினாமாச் செய்த அரச அதிபர் பல வருடகால அனுபவம் உள்ளவர் ஏற்கனவே இரண்டு தமிழ் மாவட்டங்களில் அரச அதிபராகப் பணிபுரிந்தவர். (அ-76)

### பொதுமக்களில்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் காரணமாக ஷெல் தாக்குதல்கள் வீடுகளுக்கு பலத்த சேதத்தை ஏற்படுத்தவில்லை

சில பனை மரங்களும் ஷெல் தாக்குதலில் முறிந்துவிழுந்தன.

தடைப்பட்டிருந்த வாகனப் போக்குவரத்து மாலை 6 மணிக்குப் பின்னர் மீண்டும் ஆரம்பமானது (இ-எ-157-160)

## ஷெல் தாக்குதல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மினி முகாமில் இருந்து ஆயிரத்துக்கும் அதிகமான சிப்பாய்கள் கவச வாகனங்களுடன் வெளியே வந்தனர்.

### ஆகாயப் பாதுகாப்பு

அப்போது ஒரு வேவு விமானமும் 2 ஹெலிக்கொப்டர்களும் ஆகாயப் பாதுகாப்பு வழங்கின. கவச வாகனங்களுடன் ஒரு புல்டோசரும் வந்தது.

சிப்பாய்கள் அனைவரும் குண்டு துளைக்காத உடை அணிந்திருந்தனர்.

மினி முகாமில் இருந்து நூறு யார் வரை முன்னேறிய சிப்பாய்களை தமிழீழ விடுதலைப் புலிகள் எதிர்கொண்டு உக்கிரமாக மோதினர்.

அந்தச் சமயம் கடற்படையினர், பீரங்கிக் கப்பலில் இருந்து பீரங்கித் தாக்குதல்களை நடத்தினர்.

ஹெலிக்கொப்டரில் இருந்து ரொக்கெட் மோட்டோ தாக்குதலும் நடத்தப்பட்டது.

இராணுவ முகாமில் இருந்து ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதற்கு ... கொடுக்கும் வகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இராணுவமுகாம், பீரங்கிப் படகு ஆகியவற்றை நோக்கியும் புலிகள் ஷெல் தாக்குதல் நடத்தினர். அதன் பின்னரே இராணுவத்தினர் ஷெல் தாக்குதலை நிறுத்தினர்.

நேற்றுப் பிற்பகல் 3-30 மணி வரை இந்த நேரடி மோதல் நீடித்தது. நூறு யார் வரையில் வந்த சிப்பாய்கள் விடுதலைப் புலிகளின் உக்கிரத் தாக்குதலால் மேலும் முன்னேற முடியாது தோல்வியுடன் மறுபடி முகாம் நோக்கி திரும்பினர்.

விடுதலைப்புலிகள் மேற்கொண்ட சிலிண்டர் தாக்குதலில் 7 சிப்பாய்கள் உயிரிழந்தனர் என்று கூறப்படுகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த இரண்டாவது லெப்டினன்ட் ரவி (பூலோகம்) வீர மரணம் அடைந்தார். இவர் வெற்றிலைக்கேணியைச் சேர்ந்த தங்கத்துரை ஆவார். மற்றும் இருவர் சிறு காயங்களுக்கு ஆளாகினர்.

இம் மோதல் முடிவடைந்த பின்னர் மாலை ... மணியளவில் இரண்டு ... விமானங்கள் ... லிருந்து புறப்பட்டு வல்லைவெளி ஊடாக ...

## குடியரசுதினச் செய்தியில் கடைசி நேரத்தில் நீக்கப்பட்ட பந்தி!

கொழும்பு, பெப். 11

இந்தியக் குடியரசு தினத்தை ஒட்டி கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் திரு ஜே. என். டிக்ஸிற் வெளியிட்ட குடியரசு தினச் செய்தியில் ஒரு பந்தி கடைசி நேரத்தில் நீக்கப்பட்டது.

இலங்கை வெளிநாட்டமைச்சின் வற்புறுத்தலுக்கு இணங்கவே அந்தப் பந்தியை நீக்க திரு. டிக்ஸிற் சம்மதித்தார்.

இப்படி கொழும்பு ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

வெளியுறவுக் கொள்கைபற்றி காமினி அமைச்சர் காமினி திஸநாயக்க சென்னை ''இந்து'' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் சில கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

அவற்றுக்குப் பதில் கூறும் விதத்தில் இந்தியத் தூதரின் குடியரசுதினச் செய்தியில் நீக்கப்பட்ட பந்தி அமைந்து இருந்ததாம்.

ராஜதந்திர முறைப்படி வெளிநாட்டுத் தூதர்கள் ஏதேனும் செய்தி வெளியிட விரும்பினால் அதை வெளியிடுவதற்கு முன்னர் அந்த நாட்டின் வெளிநாட்டமைச்சுக்கு பிரதி ஒன்றை முன்கூட்டியே அனுப்ப வேண்டும்.

அதற்கு இணங்கவே இந்தியத் தூதர் கடந்தமாத இறுதியில் தனது குடியரசுதினச் செய்தியை அனுப்பியிருந்தார். (இ-எ)

## யாழ் செயலகத்தில் பிறப்பு - இறப்பு சான்றிதழ்பெறுவதில்தாமதம்

யாழ்ப்பாணம், பெப். 11

பிறப்பு இறப்பு சான்றிதழ்களை யாழ் மாவட்ட மக்கள் பெறுவதில் பெரும் தாமதம் ஏற்படுகின்றது. யாழ் செயலகத்திலுள்ள பதிவாளர் அலுவலகத்தில் ஊழியர் பற்றாக்குறையே இதற்குக் காரணம்.

தினசரி 500 சான்றிதழ்களுக்கான விண்ணப்பங்கள் வருகின்றன. இவற்றில் 150 சான்றிதழ்கள் வரை அவசரமாகக் கோரப்படுகின்றன.

அனேகமானவை ஒரு மாதத்திலும், அவசர தேவையானவை பத்து நாட்களிலும் உரியவர்களுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன

1984 ஆம் ஆண்டு இக் காரியாலயத்தில் இருந்த இரு போட்டோஸ்ரற் இயந்திரங்கள் கடத்தப்பட்டன.

அதைத் தொடர்ந்து பிரதிகள் கையாலேயே எழுதப்படுகின்றன.

தற்போது பிரதி எடுப்பதற்கென 4 ஊழியர் மட்டுமே உள்ளனர்.

மேலதிகமாக 15 ஊழியர்களைச் சேர்த்துக் கொள்ள அரசு சென்ற வருடம் அனுமதி அளித்திருந்தது.

ஆனால் இதுவரை பலர் விண்ணப்பம் அனுப்பியும் ஒருவரும் எடுக்கப்படவில்லை.

இதற்கு உயர் அதிகாரிகளின் அசமந்தப் போக்கே காரணம் என்று கூறப்படுகிறது. (இ-5)

### விசேஷ தினங்களிலும் இறைச்சிக் கடை மூடப்படும்

யாழ்ப்பாணம் பெப் 11

யாழ் மாவட்ட சன சமூக நிலையங்களின் சமாசம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க வெள்ளிக்கிழமையோடுமற்றும் விசேஷ தினங்களில் இறைச்சிக்கடைகள் மூடப்படும்.

இவ்வாறு யாழ்மாவட்ட இறைச்சிக்கடை வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது

யாழ் மாநகர சபைக்கு வெளியே உள்ள இறைச்சிக் கடைகள், மினி இறைச்சிக்கடைகள் ஆகியவற்றை வெள்ளி, பௌர்ணமி சமயத்தினங்களில் மூடவேண்டும் எனவும் சங்கம்கேட்டுள்ளது. (இ-5)

### இன்று...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குருநகர் கடற்றொழில் அபிவிருத்திச் சங்கமும் ஏனைய பொது ஸ்தாபனங்கள், சனசமூக நிலையங்கள் ஆகியவையும் இணைந்து இந்த ஊர்வலத்தை நடத்துகின்றன.

இன்று காலை 9 மணியளவில் குருநகர், பாஷையூர், நாவாந்துறை, நல்லூர் ஆகிய பகுதிகளில் இருந்து புறப்படும் ஊர்வலங்கள் ஆரியகுளம் சந்தியில் காலை 10-30 மணியளவில் ஒன்றிணையும்.

அதன் பின்னர் யாழ் நகரின் முக்கிய வீதிகள் ஊடாக சென்று யாழ் செயலகத்தை அடையும். ஊர்வலத்தின் முடிவில் ... வழமையோல் யாழ் அரச அதிபரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்படும்.

### சரசாலை---

(1ஆம் பக்க தொடர்ச்சி)

காயமடையவில்லை.

திங்கட்கிழமை சரசாலைப் பகுதியில் இச் சம்பவம் நடந்தது.

இப்பகுதியில் மேலாக பறந்துகொண்டிருந்த ஹெலிக்கொப்டர் வயல்வெளிகளில் பொது மக்கள் கூட்டமாக நிற்பதைக் கண்டு ஷெல் தாக்குதல் மேற்கொண்...

## பண்டிவிரிச்சானில் அரச விடுதி மீது குண்டு வீச்சு அதிகாரி கொல்லப்பட்டார்

யாழ்ப்பாணம், பெப். 11

பண்டிவிரிச்சான் பகுதியில் உள்ள கூராய் என்ற கிராமத்தின் மீது நடத்தப்பட்ட குண்டு வீச்சுத் தாக்குதலில் கூராய் நீர்ப்பாசனத் திணைக்கள மேற்பார்வையாளர் ஒருவர் கொல்லப்பட்டார்.

சம்பவம் பற்றி தெரிய வருவதாவது;

திங்கட்கிழமை பகல் 12 மணி அளவில் பண்டிவிரிச்சான் பகுதியை அடுத்துள்ள கூராய் என்ற கிராமத்தின் மீது ஹெலிக்கொப்டர்கள் வட்டமிட்டுத் திரிந்தன

இதன் காரணமாக வீடுகளில் இருந்த பலரும் காடுகளுக்குள் ஓடினர்.

திடீரென இப்பகுதிக்கு வந்த குண்டு வீச்சு விமானம் ஒன்று வீடுகள் மீது குண்டுகளை வீசியது

பல வீடுகள் சேதமுற்றதாகவும், சில வீடுகள் எரிந்தும் நாசமாகின. கூராய் நீர்ப்பாசன திணைக்கள மேற்பார்வையாளரின் அரச விடுதி மீதும் குண்டுகள் வீசப்பட்டன.

இதனால் கந்தையா விநாயகமூர்த்தி (37 வயது) என்ற மேற்பார்வையாளர் மரணமானார்.

இவரது மனைவியும் மகனும் படுகாயமடைந்த நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

இவர்களது அரசவிடுதியும் முற்றாக சேதமடைந்துள்ளது

விநாயகமூர்த்தி இந்திராணி (26வயது, மனைவி) விநாயகமூர்த்தி விக்னேஸ்வரன் (7 வயது, மகன்) ஆகியோரே காயமடைந்தவர்களாவர். (இ-10)

## பலாலியில் அரண்களை பலப்படுத்தும் போராளிகள்

பலாலி, பெப் 11

பலாலி முகாமைச் சுற்றியுள்ள போராளிகளின் காவல் அரண்கள் பலப்படுத்தப்படுகின்றன.

கட்டுவன், குரும்பசிட்டி, வயாவிளான் பகுதிகளிலுள்ள மதில்கள் உடைக்கப்பட்டும், பற்றைகள் வெட்டப்பட்டும், முன் தோண்டப்பட்ட அகழிகள் மேலும் பாதுகாப்பாக சீரமைக்கப்பட்டும் வருகின்றன.

சென்றிகளைப் பலப்படுத்தும் வேலைகளும் நடைபெறுகின்றன.

நேற்று நூற்றுக்கு மேற்பட்ட மக்களும், போராளிகளும் ஆபத்தையும் பொருட்படுத்தாது பாதுகாப்பு வேலைகளில் ஈடுபட்டதைக் காணக்கூடியதாக இருந்தது (இ-119)

### ஷெல்கள் விழுந்து வெடித்தன

அச்சுவேலி, பெப். 11

தொண்டமானாறு இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல்கள் தம்பாலை, இடைக்காடு, வளலாய் பகுதியிலும் விழுந்து வெடித்தன.

ஹெலிக்கொப்டரில் இருந்து இப்பகுதியை நோக்கி துப்பாக்கிப் பிரயோகமும் செய்யப்பட்டது; (இ-11)

### இரண்டாவது---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கத்தாவில் ஆரம்பமாகின்றது

இந்திய அணியின் சார்பில் இப் போட்டியில் சுனில் கவாஸ்கர் விளையாடவில்லை. (இ-எ)

### பரந்தன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் சிப்பாய்கள் கொண்டுவந்து இறக்கப்பட்டனர்.

இதனால் நேற்று பரந்தன் பகுதி முழுமையான போர்க்களமாக மாறியதுடன் பலத்த குண்டுச் சத்தங்களும் வெடிச் சத்தங்களும் கேட்ட வண்ணம் இருந்தன. (இ-76)

### குப்புறு..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இறந்து.

நடுத்தர வயதுடைய இளைஞர்களை கைது செய்த சிப்பாய்கள் அவர்களை முகாமுக்கு கொண்டுசென்றனர். (இ-10)

### 6 தினங்களில் 114 தமிழர் உயிரிழப்பு

சென்னை, பெப் 11

கடந்த ஆறு தினங்களாக தமிழ்ப்பகுதிகளில் இடம்பெற்றுவந்த இராணுவ நடவடிக்கைகளில் போராளிகள் உட்பட 114 தமிழர்கள் உயிரிழந்தனர்.

இப்படி இலங்கை அரசின் புள்ளி விவரங்கள் தெரிவிப்பதாக இந்திய வானொலி நேற்று அறிவித்தது.

மன்னாரில் போராளிகள் என்ற சந்தேகத்தில் 50 தமிழரை ஆயுதப் படையினர் கைதுசெய்தனர் என்றும் அச்செய்தி மேலும் தெரிவித்தது (இ-எ)

### சிறப்பாக நடந்த உற்சவம்

சாவகச்சேரி, பெப் 11

மட்டுவில் வடக்கு லூர்த்துமாதா தேவாலய வருடாந்த உற்சவத்தையொட்டி விசேட பூசைகளுடன் திருவுருவ சுற்றுப்பிரகாரமும் சிறப்புற நடைபெற்றன.

பங்குத்தந்தை வண. கருணாகரன் அடிகளார் பூசைகளை நடத்தி வைத்தார்.

## பத்திரிகைத்துறை பயிலுநர்களுக்கான விண்ணப்பம்

* உதயன் பத்திரிகை நிறுவனம் ஆர்வமும், துடிப்புமுள்ளவர்களுக்கு பத்திரிகைத்துறைப் பயிற்சியை வழங்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது.
* பத்திரிகைத் துறைசார்ந்த வல்லுநர்கள் பயிற்சி வகுப்புகளில் கலந்து கொண்டு விரிவுரைகள் வழங்குவார்கள்.
* ஆறு மாத கால வார இறுதி/பகுதி நேர பயிற்சியை மேற்கொள்ளுபவர்களுக்குப் பயிற்சிக் கால முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும் (சான்றிதழ்கள் வழங்கும்போது திறமை, ஒழுக்கம், வரவு போன்றவை கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும்)

தகைமைகள்:

1. 21 வயதிற்கும் 30 வயதிற்கும் உட்பட்ட ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
2. (அ) க. பொ. த (உயர்தரம்) பரீட்சையில் தமிழ்மொழியில் விசேட சித்தியுடன் சித்திபடைந்திருக்க வேண்டும்
   (ஆ) க பொ த (சாதாரணதரம்) பரீட்சையில் தமிழ்மொழி, ஆங்கிலம் ஆகிய பாடங்களில் விசேட சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்
3. மேலதிக ஆங்கில அறிவுடன் பத்திரிகைத்துறை சார்ந்த அனுபவமும் விசேட தகைமைகளாகக் கொள்ளப்படும்.

* பயிற்சிக் காலத்தில் எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது. பயிற்சி முடிவில் தொழில் வழங்குவதற்கான உத்தரவாதம் இல்லை
* விண்ணப்பப் படிவங்களை எமது அலுவலகத்தில் நேரிலோ அல்லது தபால் மூலமோ பெற்றுக் கொள்ளலாம். (தபால் மூலம் பெற்றுக் கொள்ள விரும்புகின்றவர்கள் சுய முகவரி இட்ட தபால் தலை ஒட்டிய, கடித உறையை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்).
* பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் பொது முகாமையாளர், உதயன் பத்திரிகை நிறுவனம், அஞ்சல் பெட்டி எண்-23, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 28-2-87 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்கப்படவேண்டும்
* விண்ணப்பங்களை அனுப்பும்போது அஞ்சலுறையின் இடதுபக்க மேல் மூலையில் ''பத்திரிகைத் துறை பயிலுநர்களுக்கான விண்ணப்பம்'' என்று குறிப்பிடப்பட வேண்டும்.

## ஓராண்டு நினைவு அஞ்சலி

கந்தசாமி அசோகநாதன்
(Attorney-at-Law)



தோற்றம்: 18-9-1948

மறைவு: 22-2-1986

திதி: 11 - 02 - 1987

அவரின் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தாய், மனைவி, மகள், அக்கா, அண்ணா, தம்பி, மருமக்கள்.

சங்கரப்பிள்ளை வீதி,
மானிப்பாய்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி. இரண்டாம் ஒழுங்கை 15 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது வெளியீட்டு திகதி 11 - 02 - 1987 தொலைபேசி இல. 24805 23078

Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15, Second Lane, Power House Road, JAFFNA Registered as a News-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org